# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No.** 137/2015 **Date**: 02.08.2023

**PW**-1- நாமகம்மாள்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்து என் பெற்றோருக்கு சுயாஜ்ஜீயமாக பாத்தியப்பட்ட சொத்து. அவர்களுக்கு பாரம்பரிய சொத்தும் இருந்தது என்றால் சரியல்ல. செங்கல் சூளையை விற்று தாவா சொத்தை வாங்கினார். இந்த விவரத்தை நான் வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணம் 3.5 ஏக்கர். அதை 3 பாகமாக பிரித்து ஓட்டினார்கள் என்றால் சரியல்ல. 6 பேரும் கூட்டாக ஓட்டினோம். கிழ பாகம் பழனியப்பனுக்கும், நடுபாகம் தங்கராஜக்கும், மேற்கு புற பாகம் என் அம்மாவிற்கும் ஒதுக்கி இருந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தென்புறத்தில் 2 வீடுகள் உள்ளது ஒன்று அட்டை வீடு, ஒன்று ஓட்டு வீடு. அதில் ஒரு வீட்டில் 1 ம் பிரதிவாதி தான் வசிக்கிறார் என்றால் சரிதான். மற்றோரு வில்லை வீட்டில் என் மகன் நாகராஜீ வசிக்கிறார். என் மகன் வசிக்கும் வீட்டின் கதவு எண், மின் இணைப்பு என் தெரியாது. என் மகன் வீட்டு வரி, மின் கட்டணம் செலுத்துவதில்லை. 1 ம் பிரதிவாதி அவர் பெயரில் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டில் என் மகன் வசிப்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் மகன் அந்த வீட்டில் வசிக்கவில்லை என்பதால் தான் நான் முன்னுக்கு பின் முரனாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாகராஜ் ஊர் நத்தத்தில் உள்ள வீட்டில் தான் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 6 பேரும் கூட்டு சுவாதீனம் செய்ததை காண்பிக்க ஆவணம் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகத்திற்கு பின்பு நாங்கள் எப்பபோதும் விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாய்மொழி பாகத்தின் போது 4 மகள்களும், தலா ரூ.5 ஆயிரம் பணம் வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. அதனால் தான் 1 ம் பிரதிவாதி அவரது பாகத்தில் 2 வீடு கட்டிய போது நாங்கள்

ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. அனைவர் பெயரிலும் பட்டா உள்ளது. அந்த பட்டா என் வீட்டில் உள்ளது என்னால் தாக்கல் செய்ய இயலும். ஏற்கனவே வாய்மொழி பாகம் ஏற்பட்டுவிட்டதால் இத்தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு 6ல் 1 பாகம் உரிமை இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-நாகம்மாள்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி